

பத்திரிக்கைச் செய்தி வெளியீடு - 108

13.10.2026

லஞ்சம் கேட்டு பெற்ற வழக்கில் முன்னாள் இணை சார்பதிவாளருக்கு 2 ஆண்டுகள் சிறை மற்றும் அபராதம் விதித்து தீர்ப்பு

கடந்த 2010-ம் ஆண்டு, புகார்தாரர் தனது ஆவணத்திற்கான முத்திரை தீர்வையை உயர்த்த வேண்டாம் எனக்கோரி, காஞ்சிபுரம் மாவட்ட இணை சார் பதிவாளர் அலுவலகத்தில் மனு அளித்திருந்தார். இது தொடர்பாக திரு.சுரேஷ், இணை சார்பதிவாளர், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்கள் புகார்தாரரின் ஆவணத்திற்கான முத்திரை தீர்வையை உயர்த்தாமல் இருக்க தனக்கு ரூ.5,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, காஞ்சிபுரம் பிரிவில் அளித்த புகாரின்பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கை கடந்த 2010ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. பொறிவைப்பு நடவடிக்கையின்போது புகார்தாரரிடமிருந்து திரு.சுரேஷ், இணை சார்பதிவாளர் அவர்கள் லஞ்சபணம் ரூ.5,000/- பெற்றபோது கைது செய்யப்பட்டார். இவ்வழக்கில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் வழக்கு நடைபெற்று வந்தது. இன்று 13.10.2026ந் - தேதி திரு.சுரேஷ் அவர்களுக்கு 2 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் மற்றும் ரூ.10,000/- அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

PRESS RELEASE – 108
13.10.2026

FORMER JOINT SUB-REGISTRAR CONVICTED IN BRIBE CASE

During 2010, the complainant submitted an application at the Joint Sub-Registrar Office, Kanchipuram District, requesting not to increase the stamp duty on his document. In this regard, Tr. Suresh, Joint Sub-Registrar, Kanchipuram District, demanded Rs.5,000/- as bribe from the complainant for not increasing the stamp duty on the said document. The complainant not willing to give bribe, preferred complaint with Vigilance and Anti–Corruption, Kanchipuram Detachment. In this connection a trap was organized. During the trap proceedings, Tr.Suresh, formerly Joint Sub-Registrar received the bribe amount of Rs.5,000/- from the complainant. The accused was arrested and remanded. On completion of investigation, the case was charge sheeted against the accused. Today 13.10.2026 the Principal District Court Judge, Kanchipuram pronounced the judgment against Tr. Suresh, formerly Joint Sub-Registrar and sentenced him to undergo Rigorous Imprisonment for 2 years and fine of Rs.10,000/-.